# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 195/நகராட்சி/2018**
**நாள் : 25/10/2018**

**திரு குட்டி M. கணேசன்,**
**விக்கிரமசிங்கபுரம் – 627 425.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி,**
**விக்கிரமசிங்கபுரம்.** – **எதிர் மனுதாரர்**

திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம், பிரதான சாலை, எண்.220/4 என்ற முகவரியில் வசித்து வரும் திரு குட்டி M. கணேசன் அவர்களின் 29.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.09.2018 அன்று பெறப்பட்டு 195/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம், பிரதான சாலை, எண்.220/4 என்ற முகவரியில் வசித்து வரும் திரு குட்டி M. கணேசன் என்பவர் கீழ்க்காணும் முறையீடுகளைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) 2018–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நடைபெற்ற மன்றக் கூட்ட தீர்மானங்கள் அனைத்தையும் நகராட்சி இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் ;

(2) விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் லஞ்ச லாவண்யங்களைத் தவிர்க்க ஒரு தனிக்குழு அமைத்து மாதா மாதம் ஆய்வு செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையீடுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில், 2018–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முடிய நடைபெற்ற மன்றத் தீர்மானங்கள் அனைத்தும் நகராட்சி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்று 28.09.2018 நாளிட்ட கடிதம் எண்.4332/2018 –இல் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும்,

பதிவேற்றம் செய்யப்பட்ட விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கப் பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார். நகராட்சியில் ஊழல் புகார்கள் ஏதேனும் இருப்பின் அது சம்பந்தமாக பொதுமக்கள் புகார் அளிக்கும் வகையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலக முகவரி மற்றும் தொலைபேசி எண்களை பொதுமக்கள் அறியும் வகையில் அறிவிப்புப் பலகை நிறுவப்பட்டுள்ளது என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் 29.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு ஒரு திங்கள் கழித்தே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டுள்ளது. மேலும், போதிய கால அவகாசம் அளித்தும் 10.10.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கும் மனுதாரர் வரத் தவறியுள்ளார். இந்நிலையில் ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், அதன் முகவரி, தொலைபேசி, படிவம்–1 போன்றவையும் அறிவிப்பு பலகையில் இருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், **25–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு.குட்டி M. கணேசன்,**
   **220/4, மெயின் ரோடு,**
   **விக்கிரமசிங்கபுரம் – 627 425.**
   **திருநெல்வேலி மாவட்டம்.**

2. நகராட்சி ஆணையர்,
   விக்கிரமசிங்கபுரம் நகராட்சி,
   விக்கிரமசிங்கபுரம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி